# ரணில் விக்ரமசிங்க எனக்கு அழுத்தம் கொடுத்தார் நாடாளுமன்றில் அமைச்சர் ரொஷான் குற்றச்சாட்டு!

## நாளை அறிக்கையை சமர்ப்பிப்பதாகவும் தெரிவிப்பு

இடைக்காலக் குழுவை நியமிப்பதற்கான தனது முடிவை மாற்றிக்கொள்ளுமாறு ரணில் விக்ரமசிங்க தனக்கு அழுத்தம் பிரயோகித்ததாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தான் இந்த விடயத்தில் இருந்து பின்வாங்கப் போவதில்லை எனவும் அவர் இன்று நாடாளுமன்றில் குறிப்பிட்டார். அத்தோடு தாம் நியமித்த இடைக்காலக் கட்டுப்பாட்டுக் குழுவை நீக்கவே முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் நிர்வாக சபையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை வெளிக்கொண்டு வருவதற்காகவே புதிய குழு அமைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

நேற்று நாம் கிரிக்கெட் நிர்வாக சபையை இடைநிறுத்தி, புதிய குழுவொன்றை சிறிது காலத்திற்கு நியமித்திருந்தோம். தற்போது அந்தக்குழுவுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற 20-20 போட்டித் தொடரில் நேர்ந்த, ஊழல் மோசடிகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கணக்காய்வாளரினால் குறிப்பிடப்பட்டமைக்கு இணங்கவே, நாம் இந்தக் குழுவை நியமித்திருந்தோம். இந்தக் குழுவுக்கே தற்போது நிதிமன்றம் இடைக்காலத் தடையை விதித்துள்ளது.

2 ▶



மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 21 செவ்வாய்க்கிழமை 07.11.2023 கதிர் 108

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## ரொஷானின் தீர்மானத்தை இடைநிறுத்தியது நீதிமன்றம்



அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கை கிரிக்கெட் இடைக்கால குழுவின் செயற்பாடுகளை 14 நாட்களுக்கு இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதேபோல் விளையாட்டு அமைச்சர் நியமித்த குழு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கும் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது .

இதேவேளை நாடாளுமன்றத்தில் இன்று கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை

2 ▶

## அர்ஜுன மகேந்திரன் உட்பட்ட 10 பிரதிவாதிகளை விடுவித்த தீர்ப்பை இடைநிறுத்தியது உயர்நீதிமன்று

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் உட்பட 10 பிரதிவாதிகளை விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிறப்பித்த உத்தரவை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

2022ஆம் ஆண்டு, பிரதிவாதிகளுக்கு எதிராக பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டைத் தொடர முடியாது என கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவித்து அவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்குத் தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்ற ட்ரயல் அட் பார் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை இன்று காலை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்றம், குறித்த தடை உத்தரவை பிறப்பித்துள்ளது. நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, பிரீத்தி பத்மன் சூரசேன, ஏ.எச்.எம்.டி.நவாஸ், ஷி ரான் குணரத்ன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய ஐவர் அடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மேன்முறையீடு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. .

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரலும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பிரியந்த நவன, பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டை தொடர முடியாது எனவும் கொழும்பு மேல் நீதிமன்ற ட்ரயல் அட்-பார் வழங்கிய கேள்விக்கான தீர்ப்பு பிழையானது எனவும் தெரிவித்தார். இதனால், சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்ற தீர்ப்பை ரத்துச் செய்ய உத்தரவிடுமாறு சட்டமா அதிபர் கோரியிருந்தார். (த)

## ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் 48 மணி நேரத்துக்கு வேலை நிறுத்தம்

இன்று நள்ளிரவு முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

கண்டி மற்றும் நுவரெலியா தபால் நிலையங்கள் அமைந்துள்ள கட்டிடங்களை விற்பனை செய்யும் தீர்மானத்திற்கு எதிராகவே இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படுவதாக குறித்த தொழிற்சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

அதன்படி இன்று நள்ளிரவு முதல் 48 மணித்தியாலங்களுக்கு இந்த வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## சிறுபோகத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 40 லீற்றர் டீசல் வழங்க விவசாய அமைச்சு முடிவு

கடந்த சிறுபோகப் பயிர்ச்செய்கையின்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, பெரும்போகத்திற்கான எரிபொருளினை மானியமாக வழங்குவதற்கு விவசாய அமைச்சு முடிவுசெய்துள்ளது.

கடந்த போகத்தில் பயிர்கள் சேதமடைந்த விவசாயிகளுக்கு பெரும்போகப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 17,000 ரூபா பெறுமதியான டீசலைப் பெற்றுக்கொடுப்பதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

உரம் கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் 15,000 ரூபா நிவாரணத் தொகை மற்றும் ஹெக்டேர் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகை ஆகியவற்றுக்கு மேலதிகமாக இந்த நிவாரணம் வழங்கப்படுவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பயிர்ச் சேதங்களுக்கு உள்ளான விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணம் தொடர்பில் விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்ற நிலையில் குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் இரண்டு நாட்களில் ஒவ்வொரு விவசாயிக்கும் தலா 40 லீற்றர் டீசல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் குறித்து உயர் நீதிமன்றத்தின் அதிரடி அறிவிப்பு

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலத்தின் சில சரத்துக்கள் நாடாளுமன்றத்தில் சிறப்பு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் நாடாளுமன்றத்துக்கு அறிவித்துள்ளது என்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச இன்று நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார்.

எவ்வாறாயினும், சில சரத்துகள் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்மானத்தின் உத்தேச திருத்தங்களுக்கு உட்பட்டு, செயற்குழுவின் போது திருத்தப்பட்டால், இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தின் எளிய பெரும்பான்மையால் நிறைவேற்ற முடியும் என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு உட்பட்டு சட்டமூலம் அல்லது அதன் விதிகள் எதுவும் அரசமைப்புக்கு முரணாக இல்லை என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (அ)

## இடைக்கால நிர்வாகக் குழு சரியா, தவறா? என்பதை ஆராய அமைச்சரவை உபகுழு

### கேலிக்குரிய விடயமென சஜித் விளாசல்!



இலங்கை கிரிக்கெட் சபையில் இடம்பெறும் ஊழல், மோசடி உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து விளையாட்டுத்துறை அமைச்சர் இவ்வாரத்திற்குள் நாடாளுமன்றுக்கு அறிவிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை முன்வைத்துள்ளார்.

இன்று நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், இடைக்கால நிர்வாகக்

2 ▶

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# கொழும்பில் 100 மின்சார முச்சக்கரவண்டிகள் முதலாவது கிலோமீற்றருக்கு ரூ.70 மாத்திரமே

## சுயதொழில் தொழிலாளர் சங்கத்தின் தலைவர்

கொழும்பு, நவ. 07

கொழும்புப் பிரதேசத்தில் தற்போது 100 மின்சார முச்சக்கரவண்டிகள் சேவையில் ஈடுபடுவதாகவும், இந்தச் சேவையில் முதலாவது கிலோமீற்றருக்கு 70 ரூபா அறவிடப்படுவதாகவும் இலங்கை சுயதொழில் வல்லுனர்களின் தேசிய முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் மகிந்த குமார நேற்றுத் தெரிவித்தார்.

தொடர்ந்து இரண்டாவது கிலோமீற்றருக்கு 70 ரூபா அறவிடப்படுகிறது எனத் தெரிவித்த அவர், குறித்த மின்சார முச்சக்கரவண்டியை மூன்றரை மணித் தியாலங்கள் சார்ஜ் செய்ய வேண்டும் எனவும், அதன் பிரகாரம் 130 கிலோமீற்றர் தூரத்திற்கு வாகனத்தைச் செலுத்த முடியும் எனவும் குறிப்பிட்டார்.

சாரதிகளுக்கு 20 இலட்சம் ரூபா பெறுமதியான மேற்படி மின்சார முச்சக்கர வண்டி அதிக சாதகமாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ரெந-12)

# சீனாவின் அத்துமீறலில் இருந்து அமெரிக்கா பாதுகாக்கவேண்டும்

## வவுனியாவில் போராட்டம்




வடகிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்கா தலையிட்டு தமிழர் பிரதேசங்களை சீனாவின் அத்துமீறலில் இருந்து பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் இன்று வவுனியாவில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான சீன தூதுவர் கி சென் ஹொங் தலைமையிலான குழுவினர் இரண்டாம் நாளாக இன்று நயினாதீவுக்கு விஜயம் செய்திருந்தனர்.

இதன்போது நயினாதீவு நாக விகாரையில் நடந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 500 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கை மற்றும் சீனா பௌத்த நட்புறவு சங்கமும், சீனாவின் புத்த சங்கமும் இணைந்து சீனாவில் உள்ள பௌத்த மக்களால் இலங்கையிலுள்ள வறிய மக்களுக்காக வழங்கப்பட்ட உலர் உணவுப் பொதிகளை விநியோகித்திருந்தனர்.

இந்த நிலையில், வவுனியாவில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது சங்கத்தினரால் இன்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் 2450 ஆவது நாளாக சுழற்சிமுறைப் போராட்டத்தினை முன்னெடுக்கும் பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் உள்ள கொட்டகைக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டமானது நடைபெற்றிருந்தது.

இலங்கையின் வடகிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்கா தலையிட்டு, தமிழர் பிரதேசங்களை சீனாவின் அத்துமீறலில் இருந்து பாதுகாக்க வேண்டும் என்று இதன்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் தாய்மார்களாகிய நாம், எமது தமிழர் தாயகத்தில் உள்ள காணிகளிலும் மீன்பிடி நீர் நிலைகளிலும் சீனாவின் அத்துமீறலை வன்மையாக எதிர்க்கிறோம், என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது தெரிவித்தனர்.

# 52 கிலோ கஞ்சாவுடன் குடும்பஸ்தர் சிக்கினார்



கிளிநொச்சி, கனகாம்பிகைக்குளம் பகுதியில் 52 கிலோகிராம் கஞ்சா பொதிகளை வீட்டில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் 44 வயதான குடும்பஸ்தர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)




## இடைக்கால நிர்வாகக் குழு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவை ஆராய நியமிப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுவுக்கும் தனது எதிர்ப்பினைத் தெரிவித்தார்.

இலங்கைக் கிரிக்கெட் சபையை ஊழல், மோசடிகளில் இருந்து மாற்றுவழிக்குக் கொண்டு செல்ல விளையாட்டுத்துறை அமைச்சர் ஒரு சில நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். முதற்கட்டமாக இடைக்கால நிர்வாகக்குழுவொன்று அவரால் நியமிக்கப்பட்டுள்ளது.

இடைக்காலக் குழுவொன்றை நியமிப்பது மட்டுமன்றி, இங்குள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர் நாடாளுமன்றுக்கு அறிவிக்க வேண்டும்.

பாடசாலை, சங்கம், கிராமம், மாவட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை இன்னமும் வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தையும் நாடாளுமன்றுக்கு அவர் கொண்டுவரவேண்டுமத்.

இடைக்கால நிர்வாகக் குழு சரியா, தவறா? என்பதை ஆராய, அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இது கேலிக்குரிய விடயமாகும்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ஒரு மாற்றத்திற்கான வழிமுறையைக் கொண்டுவந்துள்ளார்.

இது தொடர்பாக பலரிடம் விமர்சனங்கள் இருந்தாலும், கிரிக்கெட் பற்றி நன்கு தெரிந்த, ஊழல் அல்லாத நபர்கள்தான் கிரிக்கெட் சபையில் இருக்க வேண்டும்.

இந்த நிலையில், அமைச்சரவை உபகுழுவொன்று ஏதற்கு?

கிரிக்கெட்டில் இடம்பெறும் மோசடிகளை ஆராயத்தான் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஜனாதிபதி ஒரு பக்கத்திலிருந்தும் விளையாட்டுத்துறை அமைச்சர் இன்னொரு பக்கத்திலிருந்தும் இந்த விடயத்தை இழுத்துக் கொண்டிருந்தால் மீண்டும் பிரச்சினைகள்தான் ஏற்படும்.

எனவே, ஜனாதிபதி இத்தகைய நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும், எனவும் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

## ரொஷானின் தீர்மானத்தை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரஸ்தாபித்ததுடன், கிரிக்கெட் விளையாட்டிலிருந்து அரசியல் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இடைக்கால கிரிக்கெட் நிர்வாக குழுவின் தலைவராக நேற்று நியமிக்கப்பட்ட அர்ஜுன ரணதுங்க, நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவின் பின்னர் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் இருந்து வெளியேறியுள்ளார். (அ)

## ரணில் விக்ரமசிங்க .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்னூடாக, மீண்டும் ஊழல்வாதிகள் இன்று முதல் பணியில் இணைந்து கொள்வார்கள்.

இந்நாட்டு மக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும், கிரிக்கெட் நிர்வாகக் குழுவை மாற்ற வேண்டும் என கோரியமைக்கு இணங்கத்தான் நான் இந்த மாற்றங்களைச் செய்திருந்தேன், என்றும் அவர் தெரிவித்தார். தான் நியமித்த இடைக்காலக் குழு குறித்து நாளை விசேட அறிக்கையொன்றை வெளியிட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இடைக்கால குழுவின் செயற்பாடுகளுக்கு இடைக்காலத் தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# அக்கரைப்பற்று அந்நூர் பழைய மாணவர் சங்கம் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 2018 அணி சம்பியன்



(எம்.எப்.நவாஸ்)

அக்கரைப்பற்று அந்நூர் பழைய மாணவர் சங்கம் நடாத்திய கிரிக்கட் சுற்றுப்போட்டியில் 2018ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரம் கற்ற பழைய மாணவர் அணியினர் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

வெற்றிபெற்ற சம்பியன் அணி, இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட அணிகளுக்கான பணப் பரிசில்களும் வெற்றிக் கிண்ணமும் வழங்கிவைக்கப்பட்டன.

முதலிடத்தைப் பெற்ற அணிக்கான வெற்றிக் கிண்ணத்தினை எம்.ஐ.எம். றியாஸ் அல்-மினா பாடசாலையின் அதிபருடன் இணைந்து பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். நௌபர்டீன், பாடசாலை அதிபர் ஏ.எம்.அஸ்மி, பழைய மாணவரும், ஏயார்டெல் நிறுவன அம்பாறை மாவட்ட பிராந்திய முகாமையாளருமான எஸ்.ஏ.பாரிஸ் மற்றும் பிரதி அதிபர் எம்.எச்.எம்.றமீஸ் உட்பட பலரும் இணைந்து வழங்கிவைத்தனர்.

பணப் பரிசிலை ஏஎம் சோல் மேட் நிறுவன பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் அப்துல்லா மபாஹிறா வழங்கிவைத்தார்.

இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களுக்கான வெற்றிக்கிண்ணத்தை அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ், சமூக சேவையாளர் கே.அப்துல் ஹமீட் ஜே.பி, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் முன்னாள் செயலாளரும், அல்நஜா விளையாட்டுக் கழகத்தின் உபதலைவருமான எஸ். எம்.இத்ரீஸ் ஆகியோர் இணைந்து வழங்கியிருந்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக 2020 ஆம் ஆண்டு அணித் தலைவர் என்.முஹன்னத்தும் தொடரின் நாயகனாக எம்.ஆர்.அக்கீலும் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கான பரிசுக் கிண்ணங்களை பாடசாலை அதிபரும், பழைய மாணவர் சங்கத் தலைவருமான ஏ.எம்.அஸ்மி, பழைய மாணவரும், பாடசாலை நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான எம்.பி.கியாஸ் ஆகியோர் முறையே வழங்கிவைத்தனர்.

பழைய மாணவர் சங்க, பாடசாலை அபிவிருத்தி என்பனவற்றை கருத்திற்கொண்டு பழைய மாணவர் சங்க செயலாளரும், ஊடகவியலாளரும், மார்க்ஸ்மேன் விளயாட்டுக் கழகத்தின் தலைவரும், மாற்றத்திற்கான முன்னணி, கிராம அபிவிருத்தி அமைப்பு ஆகியவற்றின் செயலாளருமான றிசாத் ஏ காதரின் நெறிப்படுத்துதலில் இச்சுற்றுப் போட்டி நடைபெற்றிருந்தது.



# மூன்று நூல்களின் வெளியீட்டு விழா

(வி.ரி.சகாதேவராஜா)

பாண்டிருப்பு அறிஞர் அண்ணா மன்றம் நடத்திய முப்பெரு நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை மண்டபத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மையதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் கிழக்கு பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ச. நவநீதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு சரவணமுத்து கணேசமூர்த்தி கவிஞர் சரவணன் எழுதிய "உயிர்ப்பின் முகவரி" சிறுகதைத் தொகுப்பு, திருமதி தனலட்சுமி முரசொலிமாறன் எழுதிய "அரசியல் சமூகவியல் அறிமுகமும்" ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு, சரவணமுத்து நரேந்திரன் விவேக வெளி தமிழேந்திரன் எழுதிய "தாயும் தமிழும்" கவிதைத் தொகுப்பு ஆகிய மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன.

இதற்கு ஜேர்மன் தமிழருவி வானொலி, சென்னை தமிழியல் ஆய்வுமையம், கவிஞர் முனைவர் கோ. மோகனரங்கன் அனுசரணை வழங்கியிருந்தனர்.

இலக்கிய அதிதியாக பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.



# பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணச் சிகிச்சை பெறும் விடுதி

(நூருல் ஹுதா உமர்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி அமைகின்ற இடங்களையும், அங்கு இடம்பெற்றுவரும் கட்டிட நிர்மாணப் பணிகள் உள்ளிட்ட சகல அபிவிருத்தி பணிகளையும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையிலான குழுவினர் நேற்று பார்வையிட்டனர்.

இதன்போது பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் எம்.ஐ.எம்.றஹீம் மற்றும் பொறியியலாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் என பலர் உடனிருந்தனர்.

சீன அரசின் நிதியுதவில் சகல வசதிகளையும் கொண்ட மூன்று மாடிக்கட்டிடம் மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, நிருவாகப் பிரிவு வசதிகளைக் கொண்ட கட்டிடத் தொகுதி என பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# காஸா சிட்டியை சுற்றிவளைத்துவிட்டோம்! இஸ்ரேல் ராணுவம் அறிவிப்பு வெளியிட்டது



காஸா பகுதியின் தலைநகரான காஸா சிட்டியை சுற்றிவளைத்துவிட்டதாக இஸ்ரேல் ராணுவம் நேற்று அறிவித்தது.

அதையடுத்து, கூடிய விரைவில் அந்த நகருக்குள் ராணுவம் நுழையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து இஸ்ரேல் ராணுவத்தின் தலைமை செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹாகரி செய்தியாளர்களிடம் கூறியதாவது,

காஸா சிட்டியை அனைத்து திசைகளிலும் இஸ்ரேல் ராணுவம் முழுவதுமாக சுற்றிவளைத்துள்ளது.

நகரைச் சுற்றிலும் இஸ்ரேல் படையினரின் உள்ளதால் காஸாவின் தெற்குப் பகுதியும், வடக்குப் பகுதியும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. இஸ்ரேலுக்கும், ஹமாஸுக்கும் இடையிலான அண்மைக் காலப் போரில் இது மிக முக்கியக் கட்டமாகும் என்றார் அவர். முன்னதாக, காஸா நகரை நோக்கி தங்கள் நாட்டுப் படையினர் மேலும் முன்னேறிச் செல்வதற்கு வசதியாக, இஸ்ரேல் ராணுவம் ஞாயிற்றுக்கிழமை இரவு தீவிர குண்டுவீச்சு நடத்தியது.

தரை, கடல் மற்றும் வான்வழியாக நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல், கடந்த 7 ஆம் திகதிக்குப் பிறகு இஸ்ரேல் ராணுவம் காஸாவில் நடத்தி தாக்குதலிலேயே மிகவும் கடுமையானதாக இருந்தது. அதையடுத்து, காஸா சிட்டியின் வெளியே இருந்தபடி இஸ்ரேல் ராணுவத்தை எதிர்த்து சண்டையிட்டு வந்த ஹமாஸ் படையினர், நகருக்குள் பின்வாங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இஸ்ரேல் படையினர் நகருக்குள் நுழையும்போது அவர்களுக்கு மிகப் பெரிய அழிவை ஏற்படுத்தும் வகையில் பாதுகாப்பு அரணை பலப்படுத்துவதற்காக ஹமாஸ் அமைப்பினர் பின்வாங்கிச் சென்றதாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையே, காஸா சிட்டியை இஸ்ரேல் ராணுவம் சுற்றிவளைத்துவிட்டதால் இன்னும் 48 மணி நேரத்துக்குள் அந்த நகருக்குள் நுழைந்து ராணுவம் தாக்குதல் நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இஸ்ரேல் ஊடகங்கள் தெரிவித்தன. ஆக்கிரமிப்பு காஸா பகுதியில் இருந்து இஸ்ரேல் கடந்த 2005-ஆம் ஆண்டு வெளியேறியது. அதன் பிறகு அந்தப் பகுதியின் ஆட்சியைக் கைப்பற்றிய ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்ரல் படையினருக்கும் இடையே தொடர்ந்து பதற்றம் நிலவிவருகிறது.

இந்தப் பதற்றம் பல முறை பெரிய அளவிலான போராக உருவெடுத்துள்ளது.

இந்தச் சூழலில், கடந்த மாதம் 7 ஆம் திகதி காஸாவிலிருந்து இஸ்ரேல் மீது சுமார் 5,000 ஏவுகணைகளை சரமாரியாக வீசிய ஹமாஸ் குழுவினர், அந்த நாட்டுக்குள் அதிரடியாக ஊடுருவி 1,400க்கும் மேற்பட்டவர்களை படுகொலை செய்ததாகக் கூறப்படுகிறது.

இதில் மிகப் பெரும்பான்மையானவர்கள் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் ஆவர். ஹமாஸ் நடத்திய இந்த தாக்குதலுக்குப் பதிலடியாக அந்தப் பகுதியை முற்றுகையிட்ட இஸ்ரேல் ராணுவம், கடந்த 30 நாள்களாக காஸா முழுவதும் தீவிர வான்வழித் தாக்குதல் நடத்திவருகிறது.

அத்துடன், காஸாவுக்குள் உணவு, குடிநீர், எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள் செல்வதற்குத் தடை விதித்து, அந்தப் பகுதியை இஸ்ரேல் ராணுவம் முழுமையாக முற்றுகையிட்டுள்ளது. ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக ஒழித்துக்கட்டுவதாக சூளுரைத்துள்ள இஸ்ரேல் ராணுவம், அதற்காக தரை வழியாக காஸாவுக்குள் படிப்படியாக தாக்குதல் நடத்தி முன்னேறி வருகிறது.

இந்த நிலையில், போரின் முக்கிய கட்டமாக காஸா சிட்டியை இஸ்ரேல் ராணுவம் சுற்றிவளைத்துவிட்டதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.



# உக்ரைனில் ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் 19 வீரர்கள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு

உக்ரைனில் ராணுவ வீரா□களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்ற கட்டடத்தில் ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 19 வீரா□கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த நாட்டின் ஸபோரிஷியா பகுதியில் இந்நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்தத் தாக்குதல் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய துயரச் சம்பவம் என்று அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி விமர்சித்துள்ளார்.

போர்க் காலத்தில், பாதுகாப்புப் படையினர் பெரும் கூட்டமாகக் கூடும் இத்தகைய நிகழ்ச்சி போர் முனைக்கு அருகே நடைபெற்றது குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ருஸ்தம் உமெரொவ் கூறினார்.

இதற்கிடையே, உக்ரைனின் ஒடெஸா பகுதியிலும் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளைக் கொண்டு ரஷ்யா தாக்குதல் நடத்தியதாகவும், இதில் 8 பேர் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் தங்களது கப்பல் சேதமடைந்ததாக ரஷ்யா கூறியுள்ளது.

தங்கள் நாட்டைச் சேர்ந்த ஸாலிவ் துறைமுகத்தைக் குறிவைத்து உக்ரைன் ஏவுகணைகளை வீசியதாகவும், இதில் ஒரு கப்பல் மிதமாக சேதமடைந்ததாகவும் ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி ஈரான் அதிபர் இந்தியப் பிரதமரிடம் வலியுறுத்து



இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்தியா தனது 'அனைத்து திறன்களையும்' பயன்படுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மோடியை ஈரான் அதிபர் இப்ராஹிம் ரெய்சி வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் இன்னும் நீடித்து வரும் நிலையில், ஈரான் அதிபர் இப்ராஹிம் ரெய்சியை இந்தியப் பிரதமர் மோடி நேற்று தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பேசினார். இந்த உரையாடலின் போது இஸ்ரேல்-ஹமாஸ் போர் குறித்தும், இந்திய – ஈரான் இடையேயான உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் இரு நாட்டு தலைவர்களும் விவாதித்தனர் எனக் கூறப்படுகிறது. இதன்போது இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்தியா தனது 'அனைத்து திறன்களையும்' பயன்படுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மோடியை ஈரான் அதிபர் இப்ராஹிம் ரெய்சி வலியுறுத்தியுள்ளார்.

மேலும்,"உடனடி போர் நிறுத்தம், தடையை நீக்குதல் மற்றும் காசாவின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குதல் போன்ற உலகளாவிய கூட்டு முயற்சிகளை தெஹ்ரான் ஆதரிக்கிறது. பாலஸ்தீன மக்களைக் கொலை செய்வது தொடர்வது உலகின் அனைத்து சுதந்திர நாடுகளையும் கோபத்தில் ஆழ்த்தியுள்ளது. மேலும் இந்தப் போர் பிராந்தியத்துக்கு அப்பாற்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும்.

ஒடுக்கப்பட்ட மற்றும் அப்பாவி பெண்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப்படுவது, மருத்துவமனைகள், பள்ளிகள், மசூதிகள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் மீதான தாக்குதல்கள் எந்தவொரு மனிதனின் பார்வையில் இருந்தும் கண்டனத்துக்குரியது. அதை ஏற்றுக்கொள்ளவும் முடியாது, என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த இந்தியப் பிரதமர் மோடி இஸ்ரேல் – பாலஸ்தீன விவகாரத்தில் இந்தியாவின் நீண்டகால நிலையான நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். மேலும் போர் தீவிரமடைவதை தடுப்பது, தொடர்ந்து மனிதாபிமான உதவிகளை உறுதி செய்து, கலவரத்தால் பாதிக்கப்பட்ட காசாவில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை சீக்கிரமாக மீட்டெடுப்பதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார், என்று இந்தியத் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

# இறக்காமம் பிரதேச செயலகத்தில் பொதுமக்கள் சேவை பணியகம் பொதுமக்கள் பாவனைக்கு திறந்து வைப்பு

(நூருல் ஹுதா உமர்)

இறக்காமப் பிரதேச செயலகத்தில் கிடைக்குப்பெறும் சேவைகளை மிக எளிதாகவும், துரிதமாகவும், நேர விரயமின்றியும் பொதுமக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கான பல்வேறு வகை யான துரித வேலைத் திட்டங்கள் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸான் (நளீமி) தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் முதற்கட்டமாக பொதுமக்கள் தங்களது சேவைகளை துரிதகதியிலும், வினைத்திறனாகவும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நன்னோக்கில் பொதுமக்கள் சேவைப் பணியகம் ஒன்று மக்கள் பாவனைக்காக உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல், கணக்காளர் திருமதி. பாத்திமா றிம்ஷியா அர்ஷாட், நிருவாக உத்தியோகத்தர் எம்.எம். முஹம்மட் தௌபீக், கிராம நிலதாரி நிருவாக உத்தியோகத்தர் எச்.பி.என். யசரத்ன பண்டார, சமுர்த்தி தலைப்பீட முகாமையாளர் ஏ.எல்.நௌபீர், மற்றும் காணி உத்தியோகத்தர் என்.எல்.எம். மாஹீர் உட்பட கிளைத் தலைவர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பரீட்சை கட்டணங்கள் செலுத்துதல், பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள், வாகன அனுமதிப் பத்திரம் வழங்கல், வாகன உரிமை மாற்றம், வருமானச் சான்றிதழ், கால்நடைகள், போக்குவரத்து அனுமதிப் பத்திரம், மஹாபொல உதவித் தொகை போன்ற பல சேவைகளை பொதுமக்கள் சேவை பணியகம் ஊடாக பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



# அக்கரைப்பற்று அம்மன் இல்லத்தில் பிரார்த்தனை மண்டபம் திறப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

அக்கரைப்பற்று அம்மன் இல்லத்தில் பிரார்த்தனை மண்டபம் ஒன்று புதிதாக திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் அங்கு விசேட பிரார்த்தனையை நிகழ்த்தி, மண்டபத்தைத் திறந்து வைத்தார் .

ஏலவே வேறிடத்தில் இயங்கி வந்த அம்மன் அறநெறிப் பாடசாலையும் இதே மண்டபத்தில் இனி இயங்கவிருக்கும் நிலையில், அதற்கான அங்குரார்ப்பண நிகழ்வையும்சுவாமிகள்செய்து வைத்தார்.

இல்லத் தலைவர் கே. வாமதே வன் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம் பெற்றன.



# அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் மரக்கறிகள் அறுவடை செய்யப்பட்டன

(எம்.எப்.நவாஸ்)

சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்காக வீட்டுத் தோட்டங்களை அமைக்கும் முயற்சிக்கான முன்னுதாரணமாக, அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடப்பட்ட மரக்கறிச் செடி, கொடிகளில் காய்த்த காய்கறிகளை பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அனசார் அறுவடை செய்துள்ளார். இதன்போது உதவிப் பிரதேச செயலா ளர் றாசித் யஹியா, கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்சா, மற்றும் காரியாலய உத்தியோகத்தர்கள் உடனிருந்தனர்.



# தாறுல் இல்ம் பாடசாலைக்கு தளபாடங்கள் வழங்கும் நிகழ்வு

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஒலுவில் அக் - தாறுல் இல்ம் வித்தியாலயத்திற்கு தளபாடங்கள், கற்றல் உபகரணங்கள், பொது மக்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் என்பன இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகத்தினால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.எல்.ஹாரூன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் உமர் பாறுக் புர்கி கலந்துகொண்டு பொருட்களை வழங்கி வைத்தார்.

திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப், அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், நாடாளுமன்ற உறுப்பினரின் ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி எம்.ஜே.எம்.அஷ்ஹர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர், பெற்றோர் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பாகிஸ்தான் தூதுவருக்கு பாடசாலை அதிபரினால் நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.



# அம்பாறையில் துப்பாக்கிச் சூடு 42 வயதுடைய ஒருவர் உயிரிழப்பு

அம்பாறை மாயாதுன்ன பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 42 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த நபர் தனது வீட்டின் பின்புறம் குளித்துக் கொண்டிருந்த போது, இவ்வாறு துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

நெல் வயலினால் ஏற்பட்ட சொத்துத் தகராறே துப்பாக்கிச் சூட்டுக்குக் காரணம் என்று தெரியவந்துள்ளது.

பண்டாரதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், சந்தேகநபரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றனர். (து)

# புதுமாத்தளன் கடற்கரையில் கஞ்சாப் பொதிகள் சிக்கின

முல்லைத்தீவு காவல்துறை பிரிவிற்குட்பட்ட புதுமாத்தளன் கடற்கரையில் இன்று காலை 6.30 மணியளவில் சந்தேகத்திற்கிடமான வகையில் பொதிகள் காணப்படுவதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றை அடுத்து அப் பகுதிக்கு விரைந்த இராணுவத்தினர் கஞ்சா பொதிகளை கண்டுபிடித்துள்ளனர்.

இதனை தொடர்ந்து முல்லைத்தீவு காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதுடன் 11 கஞ்சா பொதிகளில் சுமார் 22 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சாவை காவல்துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் வேறு ஏதேனும் கஞ்சா பொதிகள் ஒதுங்கியுள்ளனவா என கடற்கரை முழுவதும் சோதனை செய்யப்பட்டதுடன் கடற்தொழிலாளர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆரம்பகட்ட விசாரணைகளின் பின்னர் கஞ்சாப் பொதிகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாக தெரிவித்த காவல் துறையினர், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (து)

# காரைநகர் நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தினை பார்வையிட்டார் சீனத் தூதர் கி ஸென்



காரைநகர் சாம்பலோடை பிரதேசத்தில் சீன அரசின் உதவியுடன் அமையவுள்ள நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தினை இலங்கைக்கான சீனத்தூதுவர் கி ஸென் ஹொங் நேற்று (6) பார்வையிட்டுள்ளனர்.

இச்சந்திப்பில் உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச சபை செயலாளர் , உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது சீன அரசாங்கத் தின் உதவித் திட்டம் தொடர்பில் தூதுவரினால் மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன் பொதுமக்களின் தேவைகள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்துகொண்டார். (01)

# சமையல் கலைஞர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு சிறப்பு போட்டி நிகழ்வுகள் ஏற்பாடு





சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ள நிலையில், ஹோட்டல் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான பயிற்சி பெற்ற சமையல் கலைஞர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், அதற்காக பயிற்சி பெற்ற சமையல் கலைஞர்களை உருவாக்கும் நோக்கில் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சிலாபம் தொடக்கம் வத்தளை வரையிலான பிராந்திய ஹோட்டல் சமையலாளர்கள் சங்கத்தின் தலைவர் கென்னடி ஜயமான்ன தெரிவித்தார்.

வென்னப்புவ ரிவோ ரிச் சுற்றுலா ஹோட்டலில் நடைபெற்ற சமையல் கலைஞர்களின் உணவுத் தயாரிப்புக்களை முன்வைக்கும் போட்டியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பயிற்சி நிலையிலுள்ள சமையல் கலைஞர்களின் குறைகளைச் சுட்டிக் காட்டி அவர்களின் திறமையை வளர்ப்பதுடன், ஹோட்டல்களுக்கு புதிய சமையல் கலைஞர்களை உருவாக்கிக் கொடுப்பதே இந்த திட்டத்தை ஏற்பாடு செய்வதன் முக்கிய நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சிலாபம் தொடக்கம் வத்தளை வரை கிட்டத்தட்ட நூற்றைம்பது சுற்றுலா விடுதிகள் உள்ளன. சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால், சுற்றுலா விடுதிகளில் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்ற பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதாகவும் முக்கியமாக சமையல் கலைஞர்களின் பற்றாக்குறை பாரிய அளவில் நிலவுவதாகவும் ஹோட்டல் உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ள நிலையிலேயே மேற்படி நிகழ்வு நடைபெற்றுள்ளது.

ரிவோ ரிச் சுற்றுலா ஹோட்டலின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரமோத் பிரியஞ்சனவின் அறிவுறுத்தலின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் கருணா ஆயுர்வேத நிறுவனத்தின் தலைவர் சமன் பிரியங்கர பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன், 36 சமையல் கலைஞர்கள் தங்கள் சொந்த படைப்புகளை இங்கு முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரெந-10)




JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.11.2023இல் வெளியிடப்பெற்றது.